1. "கத்தியின்றி ரத்தமின்றி யுத்தமொன்று வருகுது சத்தியத்தின் நித்தியத்தை நம்பும் யாரும் சேருவீர்" என்ற பாடலை நாமக்கல் கவிஞர் ராமலிங்கனார் எந்த இயக்கத்திற்காக புனைந்தார்?
    a. ஒத்துழையாமை இயக்கம்
    b. **உப்பு சத்தியாகிரகம்**
    c. வெள்ளையனே வெளியேறு
    d. எதுவும் இல்லை
2. பொருத்துக
    i. முண்டந்துறை வனவிலங்கு சரணாலயம் – 1. திருநெல்வேலி
    ii. இந்திரா காந்தி வனவிலங்கு சரணாலயம் – 2. கோயம்புத்தூர்
    iii. வெள்ளோடு பறவைகள் சரணாலயம் – 3. ஈரோடு
    iv. கரைவெட்டி பறவைகள் சரணாலயம் – 4. அரியலூர்
    a. 4213
    b. 1243
    c. 2431
    d. **1234**
3. ________________ கோவிலின் ஒட்டுமொத்த வடிவம் ஒரு தேர் போல காட்சியளிக்கிறது.
    a. வேலூர் ஜலகண்டேஸ்வரர்
    b. ஆழ்வார்திருநகரி ஆதிநாதர்
    c. மதுரை மீனாட்சி அம்மன்
    d. **தாராசுரம் ஐராவதீஸ்வரர்**
4. 1917-ஆம் ஆண்டு 'சென்னை நாட்குறிப்பு பதிவுகள்' யாரால் வெளியிடப்பட்டது?
    a. ஆனந்தரங்கம்
    b. **டாட்வெல்**
    c. கால்டுவெல்

ஆயக்குடி மரத்தடி இலவச பயிற்சி மையம்

d. ஜார்ஜ் வில்லியம் பாரஸ்ட்

5. 1959 இல் சுதந்திரக்கட்சியை தொடங்கியவர் யார்?
    a. காமராஜர்
    b. **ராஜாஜி**
    c. மா.பொ.சி
    d. அயோத்திதாசர்
6. 1690-ல் ஆங்கிலேயரால் புனித டேவிட் கோட்டை எங்கு கட்டப்பட்டது?
    a. மதராஸ்
    b. **கடலூர்**
    c. பாண்டிச்சேரி
    d. தரங்கம்பாடி
7. 1967 இல் தொடங்கப்பட்ட காவலூர் வானவியல் தொலைநோக்கி மையம் எங்கு அமைந்துள்ளது?
    a. மகேந்திரகிரி மலை
    b. **ஜவ்வாது மலை**
    c. பொதிகை மலை
    d. சேர்வராயன் மலை
8. அகழ்வாரைத் தாங்கும் நிலம்போலத் தம்மை
   இகழ்வார்ப் பொறுத்தல் தலை - என்ற குறளின் மூலம் விளக்கப்படும் பண்பு?
    a. தலைமை
    b. **பொறுமை**
    c. தவம்
    d. வலிமை
9. அரசால் அங்கீகரிக்கப்பட்ட தற்போது உள்ள திருவள்ளுவரின் படத்தை முதன் முதலில் ஓவியமாக தீட்டியவர் யார்?
    a. கொண்டைய ராஜு
    b. **வேணுகோபால சர்மா**
    c. கால்டுவெல்
    d. பாரதியார்

10. ஆங்கிலேயரருக்கு எதிரான தென்னிந்திய கிளர்ச்சியாளர்களின் சந்திப்பு மையமாக திகழ்ந்தது எது?
    a. சங்ககிரி கோட்டை
    b. சிவகங்கை
    c. திருச்சிராப்பள்ளி
    d. **வேலூர் கோட்டை**
11. இந்திய அளவில் மென்பொருள் ஏற்றுமதியில் தமிழ்நாடு எத்தனையாவது இடத்தில் உள்ளது?
    a. 1
    b. **2**
    c. 3
    d. 5
12. இலக்கியங்கள் காலம் காட்டும் கண்ணாடிகளாக விளங்க, நாட்டுப்புற இலக்கியங்கள் சமுதாய வளர்ச்சியை காட்டும் கண்ணாடிகளாக விளங்குகின்றன என்று நாட்டுப்புற இயல் ஆய்வு என்னும் நூலில் கூறியவர் யார்?
    a. **சு.சக்திவேல்**
    b. டாக்டர் மு.வ
    c. வைரமுத்து
    d. தாராபாரதி
13. கடற்கரைக் கோவில் வளாகம் உட்பட மாமல்லபுரத்தில் உள்ள நினைவுச் சின்னங்கள் மற்றும் கோவில்கள் உலக பாரம்பரிய இடம் என யுனெஸ்கோவால் அங்கீகரிக்கப்பட்ட ஆண்டு?
    a. 1982
    b. **1984**
    c. 1996
    d. 2004

ஆயக்குடி மரத்தடி இலவச பயிற்சி மையம்

14. காணபதீயம் என்ற கணபதி வழிபாடு யார் காலத்தில் தமிழகத்தில் அறிமுகப்படுத்தப்பட்டது

a. சோழர்கள்

b. **பல்லவர்கள்**

c. மராத்தியர்கள்

d. நாயக்கர்கள்

15. காவிரி ஆற்றின் குறுக்கே தமிழ்நாட்டில் அணை கட்டப்பட்டுள்ள இடம்?

a. மேட்டூர் அணை

b. கல்லணை

c. **இரண்டும்**

d. எதுவுமில்லை

16. கீழ்கண்டவற்றில் தமிழகத்தில் கல்வி வளர்ச்சி குறித்ததில் சரியான கூற்று எது?

1) ஆங்கில ஆட்சியின் போது தமிழகத்தில் அமைக்கப்பட்ட முதல் பல்கலைக்கழகம் சென்னை பல்கலைக்கழகம் (1857) ஆகும்.

2) மராத்திய ஆட்சியாளர் இரண்டாம் சரபோஜி பண்டைய ஆவணங்களை சேகரித்து அவற்றை தஞ்சை சரஸ்வதி மகால் நூலகத்தில் பாதுகாத்தார்.

3) 1919 ஆம் ஆண்டு அண்ணாமலைப் பல்கலைக்கழகம் சிதம்பரத்தில் அமைக்கப்பட்டது.

4) 1964 - 65 இடைநிலைக் கல்வி அளவில் இலவசக்கல்வி அறிமுகப்படுத்தப்பட்டது.

a. 1,2,3 சரி

b. 1,3,4 சரி

c. **1,2,4 சரி**

d. அனைத்தும் சரி

17. சமண குடைவரைக் கோயிலான கழுகுமலை எந்த மாவட்டத்தில் அமைந்துள்ளது?

a. திருநெல்வேலி

b. **தூத்துக்குடி**

c. மதுரை

d. வேலூர்

ஆயக்குடி மரத்தடி இலவச பயிற்சி மையம்

18. பொருத்துக

i. ஆயுர்வேதம் – 1. மருத்துவ இயல்
ii. தனுர்வேதம் – 2. நுண்கலை
iii. காந்தர்வ வேதம் – 3. போர்க்கலை

a. 123
b. 321
c. **132**
d. 312

19. சரியான கூற்று எது?

1) இரட்டைமலை சீனிவாசன் லண்டனில் நடைபெற்ற முதல், இரண்டாம் வட்ட மேசை மாநாடுகளில் அம்பேத்காருடன் கலந்து கொண்டார்.
2) மயிலை சின்னத்தம்பி ராஜா சென்னை மாகாணத்தில் ஒடுக்கப்பட்ட வகுப்பில் இருந்து சட்ட மேலவைக்கு தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் உறுப்பினர் ஆவார்.
3) ம.சிங்காரவேலர் தொழிலாளர் என்ற பத்திரிகையை வெளியிட்டார்.
4) முத்துலட்சுமி அம்மையார் 1942 இல் இந்தியாவின் முதல் பெண் சட்டமன்ற உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்டார்.

a. **1,2,3 சரி**
b. 1,3,4 சரி
c. 1,2,4 சரி
d. அனைத்தும் சரி

20. சுபாஷ் சந்திர போஸின் இந்திய தேசிய ராணுவப் படையில் இருந்த தமிழ் பெண்?

a. ருக்மணி லட்சுமிபதி
b. **லட்சுமி**
c. முத்துலட்சுமி
d. தில்லையாடி வள்ளியம்மை

21. தவறான கூற்றை கண்டறிக

a. **சென்னை வாசிகள் சங்கம் - 1882**
b. சென்னை மகாஜன சபை - 1884
c. சென்னை திராவிடர் கழகம் - 1912

ஆயகலை பாரத்தடி இலவச பயிற்சி மையம்

d. தென்னிந்திய நல உரிமை சங்கம் - 1916

22. தமிழ் இசையுடன் தொடர்புடையவர் யார்?

a. திரு.வி.க
b. பாரதிதாசன்
c. சி.வை.தாமோதரனார்
d. **ஆபிரகாம் பண்டிதர்**

23. தமிழ்நாட்டில் உள்ள சமண சிலைகளில் மிகவும் உயரமானதாகக் கருதப்படும் நேமிநாதர் சிலை எங்கு அமைந்துள்ளது?

a. வேலூர்
b. **திருமலை**
c. மதுரை
d. கழுகுமலை

24. தவறான கூற்றை கண்டறிக

1) தமிழ்நாட்டின் மிக நீளமான தேசிய நெடுஞ்சாலை எண் 44 ஆகும்
2) தமிழ்நாட்டின் மிக குறைந்த நீளம் கொண்ட தேசிய நெடுஞ்சாலை எண் 785 ஆகும்.
3) தமிழ்நாட்டில் நான்கு சர்வதேச விமான நிலையங்களும் இரண்டு உள்நாட்டு விமான நிலையங்களும் உள்ளன.
4) நாகப்பட்டினத்தில் இடைநிலை துறைமுகம் உள்ளது

a. 1,2 தவறு
b. 2 மட்டும் தவறு
c. 4 மட்டும் தவறு
d. **அனைத்தும் சரி**

25. பொருத்துக

| | |
|---|---|
| i. தாண்டகவேந்தர் | – 1. திருமங்கையுழ்வார் |
| ii. தம்பிரான் தோழர் | – 2. சுந்தரர் |
| iii. பட்டர்பிரான் | – 3. திருநாவுக்கரசர் |
| iv. பரகாலன் | – 4. பெரியாழ்வார் |

a. 1243

b. 4213

**c. 3241**

d. 4231

26. தீவினையார் அஞ்சார் விழுமியார் அஞ்சுவர் ______________ என்னும் செருக்கு.

a. நல்வினையார்

b. நன்மையார்

c. தலைவர்

**d. தீவினை**

27. தேனி மாவட்டம் குரங்கணி தீ விபத்து நடைபெற்ற ஆண்டு?

a. 2016

b. 2017

**c. 2018**

d. 2019

28. நாகப்பட்டினத்தில் ஸ்ரீவிஜய அரசரால் கட்டப்பட்ட புத்த சூடாமணி விகாரைக்கு ஆதரவளித்தவர்?

**a. ராஜராஜ சோழன்**

b. பராந்தக சோழன்

c. மாறவர்மன் அரிகேசரி

d. சுந்தரபாண்டியன்

29. நெற்கட்டும் சேவலோடு தொடர்புடையவர் யார்?

a. ஜெகவீரபாண்டியன்

**b. பூலித்தேவர்**

c. கட்டபொம்மன்

d. ஊமைத்துரை

30. பண்டைய சோழ அரசின் தலைநகரம் எது?

**a. உறையூர்**

b. காவிரிப்பூம்பட்டினம்

c. கங்கைகொண்ட சோழபுரம்



ஆயக்குடி மரத்தடி இலவச பயிற்சி மையம்

d. தஞ்சாவூர்

31. பண்பிலான் பெற்ற பெருஞ்செல்வம் எதைப் போன்றது திருக்குறளில் குறிப்பிடப்பட்டுள்ளது?

a. **பாத்திரத்தின் தன்மையால் நல்ல பால் கெட்டுப் போவது போல**

b. தேன்கூட்டில் கல் எறிந்தது போல

c. குடத்தில் இட்ட விளக்கு போல

d. அகல் விளக்கு போல

32. பரப்பலாறு திட்டம் எந்த மாவட்டத்தில் அமைந்துள்ளது?

a. மதுரை

b. **திண்டுக்கல்**

c. திருப்பூர்

d. கோயம்புத்தூர்

33. பல்லவர்கள் பற்றிய கீழ்க்கண்ட கூற்றுகளில் தவறானது எது?

1) பல்லவர்கள் காலத்தில் தலைமை நீதிமன்றம் தருமாசனம் என்றழைக்கப்பட்டது
2) பல்லவர்கள் காலத்தில் நானா தேசிகன் என்ற குழு வெளிநாடுகளுடன் வாணிகத்தில் ஈடுபட்டது.
3) பல்லவர்கள் காலத்தில் பெண்களுக்கு சொத்துரிமை இல்லை.
4) பல்லவர்கள் காலத்தில் காஞ்சியில் இருந்த பௌத்த கல்வி நிறுவனங்கள் 'கடிகை என்றழைக்கப்பட்டன.

a. 1 மட்டும் தவறு

b. 2 மட்டும் தவறு

c. **3 மட்டும் தவறு**

d. 4 மட்டும் தவறு

34. பொருத்துக

i. பழவேற்காடு – 1. டேனியர்கள்
ii. தரங்கம்பாடி – 2. பிரெஞ்சுக்காரர்கள்
iii. பாண்டிச்சேரி – 3. ஆங்கிலேயர்கள்
iv. சென்னை – 4. டச்சுக்காரர்கள்

a. **4123**

b. 1423

c. 4132

d. 1432

35. பழுத்தமரமும் செழித்த செல்வமும் பசியாற்றவே - என்ற பழமொழி உணர்த்தும் கருத்து என்ன?

a. ஒற்றுமை உணர்வு

b. விருந்தோம்பல்

c. **பிறருக்கு கொடுத்து உதவுதல்**

d. செல்வநிலை

36. பாண்டியர்கள் ஆட்சியில் இரு முறை (1288 , 1293) காயல் துறைமுகத்துக்கு வருகை தந்த வெளிநாட்டு பயணி யார்?

a. சீனாவின் யுவான் சுவாங்

b. சீனாவின் பாகியான்

c. **வெனிஸ் நாட்டின் மார்க்கோபோலோ**

d. அரேபியாவின் மாலிக் உல் இஸ்லாம் ஜமாலுதீன்

37. பாண்டியர்கள் காலத்தில் ஐந்து வண்ணத்தார் என்று அழைக்கப்பட்டவர்கள் யார்?

a. நடனக்கலைஞர்கள்

b. புலவர்கள்

c. **இஸ்லாமிய வணிகர்கள்**

d. காலாட்படை வீரர்கள்

38. பிற்கால பாண்டியர் காலத்தைச் சார்ந்த குடைவரை கோவில் எங்கு உள்ளது?

a. திருக்கழுக்குன்றம்

b. வல்லம்

c. **பிள்ளையார்பட்டி**

d. மகேந்திரவாடி

39. பெண் ஏன் அடிமையானாள்? என்ற நூலின் ஆசிரியர்?

a. அயோத்திதாசர்

b. இரட்டைமலை சீனிவாசன்

c. **பெரியார்**

ஆயக்குடி மரத்தடி இலவச பயிற்சி மையம்

d. ஜார்ஜ் ஜோசப்

40. பெரியாரைப் பற்றிய கீழ்க்கண்ட கூற்றுகளில் சரியானது எது?

1) குடியரசு, புரட்சி, விடுதலை போன்ற இதழ்கள் மூலம் தனது சுயமரியாதை கருத்துகளை வெளியிட்டார்.
2) பெரியாரின் சமுதாயப் பங்களிப்பைப் பாராட்டி யுனஸ்கோ நிறுவனம் 1973-ல் 'புத்துலக தொலைநோக்காளர்' தென்னிந்தியாவின் சாக்ரடீஸ் எனப் பாராட்டி விருது வழங்கியுள்ளது.
3) பெரியாரால் சுயமரியாதை இயக்கம் 1915-ல் தோற்றுவிக்கப்பட்டது.
4) பெரியாரின் முதலாவது சமுதாயப் போராட்டம் தீண்டாமை ஒழிப்பிற்காக கேரளாவில் உள்ள வைக்கம் என்ற இடத்தில் நடைபெற்றது.

a. 1,2,3 சரி

b. 2,3,4 சரி

c. **1,2,4 சரி**

d. அனைத்தும் சரி

41. பொருத்துக

i. அத்வைதம் – 1. ராமானுஜர்
ii. விசிஷ்டாத்வைதம் – 2. மத்துவர்
iii. துவைதம் – 3. ஆதிசங்கரர்
iv. விஷ்ணுசித்தர் – 4. பெரியாழ்வார்

a. 1324

b. 2134

c. **3124**

d. 4213

42. சரியான கூற்றை கண்டறி

1) சைவத் திருமுறைகளைத் தொகுத்தவர் நம்பியாண்டார் நம்பி ஆவார்.
2) வைணவ நாலாயிர திவ்ய பிரபந்தத்தை தொகுத்தவர் நாதமுனிகள் ஆவார்.
3) அறுபத்தி நான்கு ஆழ்வார்களில் பெண் ஆழ்வார் ஆண்டாள் ஒருவரே.
4) பன்னிரண்டாம் திருமுறை சேக்கிழார் அருளிய பெரிய புராணம் ஆகும்.

a. 1,2,3 சரி

ஆயக்குடி மரத்தடி இலவச பயிற்சி மையம்

b. 2,3,4 சரி

c. **1,2,4 சரி**

d. அனைத்தும் சரி

43. பொருத்துக

| | |
|---|---|
| i. சேக்கிழார் | – 1. கந்தபுராணம் |
| ii. மெய்கண்டார் | – 2. நளவெண்பா |
| iii. கச்சியப்ப சிவாச்சாரியார் | – 3. திருத்தொண்டர் புராணம் |
| iv. புகழேந்திப் புலவர் | – 4. சிவஞானபோதம் |

a. **3412**

b. 3142

c. 4132

d. 4213

44. மகிழ்ச்சியின் உச்சியில் சிவபெருமான் ஆடும் நடனம் எவ்வாறு அழைக்கப்படுகிறது?

a. பரதம்

b. **ஆனந்த தாண்டவம்**

c. ருத்ர தாண்டவம்

d. லாஸ்யம்

45. முடிசூடும் பெருமாள் என்றழைக்கப்பட்ட சமூக சீர்திருத்தவாதி யார்?

a. வள்ளலார்

b. அயோத்திதாசப் பண்டிதர்

c. ஈவேரா

d. **வைகுண்டசாமிகள்**

46. ரீகார் மண் (Regur soil) என்றழைக்கப்படுவது எது?

a. வண்டல் மண்

b. **கரிசல் மண்**

c. செம்மண்

d. உவர்மண்

ஆயக்குடி மரத்தடி இலவச பயிற்சி மையம்

47. விவசாயம் அல்லாத தொழிற்சாலை உற்பத்தியின் போது நுகரப்படும் நீர் எவ்வாறு அழைக்கப்படுகிறது?

a. நன்னீர்

b. உறை நீர்

c. நுரை நீர்

d. **மறை நீர்**

48. விஜயநகரப் பேரரசால் மதுரை, சுல்தானியர்களிடமிருந்து கைப்பற்றப்பட்டதை தெளிவாகக் கூறும் மதுரா விஜயம் நூலின் ஆசிரியர் யார்?

a. குமார கம்பண்ணா

b. **கங்காதேவி**

c. கிருஷ்ண தேவராயர்

d. அல்லாசாணி பெத்தண்ணா

49. வேலூர் கலகத்தை பற்றிய தவறான கூற்றை கண்டறிக?

1) நான்காம் மைசூர் போருக்குப் பிறகு திப்புவின் குடும்பத்தினர் வேலூர் கோட்டையில் சிறை வைக்கப்பட்டனர்.

2) வேலூர் கோட்டையில் இருந்த ஆங்கிலப் படையில் பெரும்பாலானோர் இந்திய வீரர்களாக இருந்தனர்.

3) வேலூர் கழகத்திற்கு உடனடி காரணம் 'அக்னியூ தலைப்பாகை' ஆகும்.

4) வேலூர் கழகத்திற்கு பின்னர் திப்புவின் குடும்பத்தினர் டெல்லிக்கு அனுப்பப்பட்டனர்.

a. 1 மட்டும் தவறு

b. 3,4 மட்டும் தவறு

c. **4 மட்டும் தவறு**

d. அனைத்தும் தவறு

50. பொருத்துக

பஞ்சபூத ஸ்தலங்கள்

i. ஆகாயம் – 1. காஞ்சிபுரம்

ii. நெருப்பு – 2. ஸ்ரீ காலஹஸ்தி

iii. நீர் – 3. திருவானைக்காவல்



ஆயகலை பார்த்தி இலவச பயிற்சி மையம்

iv. காற்று – 4. திருவண்ணாமலை

v. நிலம் – 5. சிதம்பரம்

a. 12345
b. **54321**
c. 52341
d. 14325

51. மருந்துத் துறையில் கண்டுபிடிப்பு மற்றும் ஆராய்ச்சியை மேம்படுத்துவதற்காக ரசாயன அமைச்சகம் சமீபத்தில் ______ என்ற தளத்தினை தொடங்கியுள்ளது.

a. RAGHR
b. VAMPIRE
c. **NIPER**
d. IGARM

52. கீழ்க்கண்ட எந்த இடத்தில் இந்தியாவில் வங்கி பணத் தாள்களை அச்சடிப்பது இல்லை?

a. தேவாஸ்
b. நாசிக்
c. மைசூர்
d. **கொல்கத்தா**

53. இந்தியாவில் உள்ள மொத்த ராம்சார் தளங்களின் எண்ணிக்கை?

a. 13
b. 26
c. **49**
d. 77

54. சௌரி சௌரா சம்பவத்தில் நூறாம் ஆண்டு நிறைவினை அனுசரித்த நாள்?

a. **பிப்ரவரி 4, 2022**
b. பிப்ரவரி 8, 2022
c. பிப்ரவரி 13, 2022
d. பிப்ரவரி 22, 2022

55. இந்தியாவில் மிகப்பெரிய வங்கி மோசடியாக எந்த நிறுவனத்தின் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது?

a. கிங்பிஷர் ஏர்லைன்ஸ் (Kingfisher)

b. **ABG கப்பல் கட்டும் நிறுவனம்**

c. வோடாபோன் ஐடியா (Vi) நிறுவனம்

d. பஞ்சாப் நேஷனல் வங்கி (PNB)

56. இந்தியாவில் முதல் நீர்வழி வாடகை வாகனம் எந்த மாநிலத்தில் தொடங்கப்பட்டுள்ளது?

a. **மகாராஷ்டிரா**

b. கோவா

c. மேற்கு வங்கம்

d. குஜராத்

57. தமிழகத்தின் முதல் பெண் டிஜிபி யார்?

a. **லத்திகா சரண்**

b. திலகவதி

c. கிரண்பேடி

d. ஆசியம்மாள்

58. பங்கு பரிவர்த்தனை ஒழுங்குமுறை ஆணையத்தின்(செபி) தலைவராக நியமிக்கப்பட்ட முதல் பெண்மணி யார்?

a. **மாதாபி புரி**

b. சித்ரா சேதுராமன்

c. நீத்தா அம்பானி

d. ஜெயபாதுரி

59. 2022 சர்வதேச பெண்கள் தினத்திற்காக கருப்பொருள்?

a. **நிலையான நாளைக்காக இன்று பாலின சமத்துவம்.**

b. தைரியம், தன்னம்பிக்கை, சுதந்திரம்.

c. இன்றைய தன்னம்பிக்கை நிலையான சுதந்திரம்

d. தேவை பாலின சமத்துவம்

ஆயக்குடி மரத்தடி இலவச பயிற்சி மையம்

60. தவறானதை தேர்ந்தெடு

1) உலக ஈர நில தினம் - பிப்ரவரி 2
2) தேசிய உற்பத்தித் திறன் தினம் - பிப்ரவரி 12
3) இந்திய தேசிய மகளிர் தினம் - பிப்ரவரி 13
4) தேசிய அறிவியல் தினம் - பிப்ரவரி 28

a. 1 மட்டும் தவறு
b. 3 மட்டும் தவறு
c. 4 மட்டும் தவறு
d. **அனைத்தும் சரி**

**ஆயக்குடி மரத்தடி இலவச பயிற்சி மையம்**

**P.ராமமூர்த்தி - 9486301705**

**Telegram Group Link: https://t.me/joinchat/VXfxxzA3AJanAzro**

ஆயக்குடி மரத்தடி இலவச பயிற்சி மையம்